# காமராசர், மூப்பனார் பிரதமர் ஆவதைத் தி.மு.க. தடுத்ததா?

**க. திருநாவுக்கரசு**



ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஜூன் 10, 11 தேதிகளில் இரண்டு நாள் பயணமாக தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார். அவர் தமிழ்நாட்டிற்கு வரும்போதெல்லாம் தி.மு.க.வைச் சீண்டிப் பார்ப்பது வழக்கம். ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளப்பி விடுவார். குண்டைத் தூக்கிப் போட்டு புகை மண்டலத்தையும், புழுதியையும் கிளப்பி விடுவார். அதைப்போல இம்முறை ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டுச் சென்று இருக்கிறார்.

"கடந்த காலத்தில் வாய்ப்பு இருந்தும் நடக்கவில்லை. தமிழரை நாட்டின் பிரதமராக்குவோம்" என்று அமித்ஷா பேசிவிட்டுச் சென்று இருக்கிறார். இவரின் இப்பேச்சின் பகுதிகள் தொலைக்காட்சிகளில் கருத்துகளாகப் பதியப் பெற்றன. அதில் 'காமராசர், மூப்பனார் பிரதமர் ஆவதை தி.மு.க.தான் தடுத்தது' என்ற கருத்துகள் இடம் பெற்று இருந்தன. ஆனால் நாளேடுகளில் அது இடம்பெற வில்லை. மறைமுகமாக அக்கருத்துகள் இடம் பெற்று இருந்தன.

கழகத்தலைவர் ஸ்டாலின் அவர்களிடம் செய்தியாளர்கள் இதைப் பற்றி கேட்டனர். 'தமிழர் பிரதமராவதில் மகிழ்ச்சி. ஆனால் மோடி மீது அமித்ஷாவுக்கு என்ன கோபம்?' என்கிற கருத்துப்பட நகைச்சுவை மிளிர பதில் அளித்து இருந்தார். 'காமராசர், மூப்பனார் பிரதமர் ஆவதை தி.மு.க. தடுத்ததாக ஒரு செய்தி ஒளிபரப்பப்பட்டதே அது என்ன?' -அந்த இரண்டு பேர் பிரதமர் ஆவதை தி.மு.க. தடுத்ததா? அந்தப் பணியைத் தி.மு.க. மேற்கொண்டதா? காமராசருக்கும் மூப்பனாருக்கும் அவ்வாய்ப்புகள் கிடைத்த செய்திகள் பரவிய போது நிகழ்ந்தது என்ன?

(1) 1964 ஜனவரி 6-ஆம் நாள் அகில இந்திய காங்கிரசின் தலைவராகக் காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனநாயகம், சோசலிசம் என்கிற நடைமுறையையும் கொள்கையும் இணைந்த திட்டத்தைக் கட்சிக்கும் ஆட்சிக்கும் அவர் வழங்கினார். பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு 1964-ஆம் ஆண்டு மே திங்கள் 27-ஆம் நாள் மரணமடைந்தார். நேருவின் மறைவுக்குப் பிறகு இந்தியப் பிரதமராக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டார் மொரார்ஜி தேசாய்!

அகில இந்திய காங்கிரசின் தலைவராக இருந்த காமராசர் பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவதில் போட்டியிருக்கக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே மொரார்ஜி தேசாயிக்கு ஆதரவு இல்லை. லால்பகதூர் சாஸ்திரி 02.06.1964 இல் பிரதமர் ஆனார். ஆனால் அவர் தொடர்ந்து பதவியில் நீடிக்க முடியாமல் அவரது மரணம் நிகழ்ந்தது. 1966 ஜனவரி 12-ஆம் நாள் அவர் மரணம் அடைந்தார். மீண்டும் பிரதமர் யார்? எனும் வினா எழுந்தது.

குல்சாரிலால் நந்தா, சாஸ்திரி மரணமுற்றதால் இடைக்காலப் பிரதமராக இருந்தார். அவரே பிரதமராக நீடிக்கவும் விரும்பினார். அகில இந்திய காங்கிரசின் பொருளாளராக இருந்த அதுல்ய கோஷ், காமராசரே பிரதமராக வேண்டும் என்று கமிட்டியில் முன்மொழிந்தார். இக்கருத்தை எல்லாத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

**1967-ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் வரவிருக்கிறது. தேர்தலுக்கு ஓராண்டுதான் இருப்பதால் அகில இந்திய காங்கிரசின் தலைவராக இருக்கிற காமராசரே பிரதமராவதுதான் நியாயம் என்று எல்லோரும் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் காமராசரோ தொடக்கத்திலேயே, 'என்னை விட்டு விடுங்கள். என் பெயரை இழுக்க வேண்டாம்' என்று உறுதியாகக் கூறிவிட்டார்.**

இதற்கிடையே இந்திராகாந்தி காமராசரைச் சந்தித்து குல்சாரிலால் நந்தா பிரதமராக நீடிக்க விரும்புவதைத் தெரிவித்தார். 'அதைப் பற்றி இப்போது என்ன? ஆலோசித்து முடிவு செய்யலாம்' என்று கூறிய காமராசர், இந்திராவைப் பிரதமராக்க வேண்டும் என்ற தன் கருத்தை அவர் வெளியிட வில்லை. மற்றவர்கள் இந்திராவின் பெயரைக் கூற வேண்டும் என்பதையே காமராசர் விரும்பினார்.

மேலும் சாஸ்திரியின் உடல் எரியூட்டப்படும் வரை இதுகுறித்துக் காமராசர் பேச விரும்பவில்லை. மொரார்ஜியும் அமைதியாக இருந்தார். ஆனால், அடுத்த நாள் அதிகாலை குல்சாரிலால் நந்தா டெல்லியிலுள்ள காமராசர் தங்கியிருந்த இடத்துக்கு வந்தார். அவர் பிரதமராக நீடிப்பதற்காக ஆதரவு தரும்படி கோரினார். ஆனால் காமராசர் மௌனமாக இருந்தார். இதனைக் காமராசர் தனக்கு வழங்கிய சம்மதமாக எடுத்துக்கொண்டார் நந்தா.

அதே நேரத்தில் 'சிண்டிகேட்' கூட்டத்தில் மொரார்ஜி தேசாய் பிரதமராக வரக்கூடாது என்று எல்லோரும் ஒருமித்த முடிவை எடுத்தனர். சாஸ்திரி மறைந்து மூன்றாம் நாள்தான் ராஜஸ்தான் முதல்வராக இருந்த மோகன்லால் சுகாதியா காமராசரிடம், 'நீங்கள் பிரதமராக வர விருப்பம் இல்லை என்றால் இந்திரா காந்தியைப் போடலாமே!' என்ற யோசனையைத் தெரிவித்தார்.

நிஜலிங்கப்பா, மொரார்ஜி தேசாயிடம் அவருக்குப் பிரதமராகும் வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்தார். மொரார்ஜி ஆத்திரம் அடைந்தார். அதுல்யகோஷ் தொடக்கம் முதல் காமராசரைப் பிரதமராக்கவே கருதினார். ஏனெனில் அவர் அகில இந்திய காங்கிரசின் தலைவராக விரும்பினார். பெரும்பான்மையான ஆதரவு காமராசருக்கு இருந்தது. ஆனால் காமராசர் பிரதமர் ஆவதை விரும்பவில்லை.

குழப்பங்கள் அதிகரித்தன. இந்திராகாந்தி சவாணைச் சந்தித்து தனக்கு ஆதரவு தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்குப் பதிலாக இந்திரா சவாணை உள்துறை அமைச்சராக்குவது என்ற உறுதியை அவருக்கு வழங்கினார். கட்சி இந்திராவை முடிவு செய்யவில்லை என்றால் சவாண் பிரதமராக இந்திரா ஆதரவு அளிப்பது என்றும் முடிவாயிற்று.

இந்தச் செய்திகளெல்லாம் மொரார்ஜி தேசாய்க்குத் தெரியாது. தனக்கென்று ஆதரவு கேட்டு சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்தபோது அவருக்கு எதிராக ஒரு பலமான அணி உருவாகியிருப்பதை உணர்ந்தார்.

காமராசர் செயற்குழுவில் பார்லிமெண்டரி கட்சித் தலைவர் - பிரதமர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். இக்கருத்தைக் காமராசர் சொல்லக்கூடாது என்று மொரார்ஜி தேசாய் கோபம் அடைந்தார். 'பார்லிமெண்ட் கட்சிதான் முடிவு எடுக்க வேண்டும். நீங்கள் தலையிடுவானேன்?' என்றும் காமராசரைப் பார்த்து மொரார்ஜி தேசாய் கேட்டார்.

1966 ஜன. 16-ஆம் நாள் பார்லிமெண்டரி கட்சித் தலைவர் தேர்தல் என்று முடிவாயிற்று. எதிர்ப்பைக் கக்கிக்கொண்டிருந்த மொரார்ஜி தேசாயை இணைத்து காமராசர் மிகவும் சாமர்த்தியமாக பிரதமர் தேர்தலை நடத்துவதற்கு ஒரு குழுவை ஏற்படுத்தினார். அக்குழுவில் காமராசர், மொரார்ஜி, நந்தா, ஜகஜீவன்ராம் ஆகியோர் இருந்தனர். இக்குழு அமைக்கப்பட்டதே தவிர செயல்படவில்லை.

இப்படிச் செயல்பாடுகள் நடந்துகொண்டு இருந்தாலும் குழுவில் இருந்த மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், பீகார், மகாராஷ்டிர முதல்வர்கள் காமராசரே பிரதமர் ஆக வேண்டும் என்று வற்புறுத்தினர். பிரதமர் தேர்வு நடைபெற வேண்டும் என்கிற பிரச்சினை எழுந்ததிலிருந்து காமராசர் பெயர் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டும் இதனைத் தொடர்ந்து மறுத்துவிட்டவர் காமராசர். தாம் அந்தப் பொறுப்பை விரும்பவில்லை என்பதைத் தெளிவாகச் சொல்லி வந்தவர் காமராசர். அப்போதைய நாளேடுகளைப் பார்த்தால் பலமுறை அவர் மறுத்து இருக்கிற பதிவுகளைப் பார்க்க முடியும்.

முதல்வர்கள் காமராசரோடு நிகழ்த்திய உரையாடலுக்குப் பிறகும் அவரது இதர நடவடிக்கைகளிலிருந்தும் காமராசர், இந்திராகாந்தி பிரதமராக வேண்டும் என்றே விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொண்டனர். இந்திரா காந்தி பிரதமராக வேண்டும் என்பதற்கு ஆதரவாக எட்டு மாநில முதல்வர்கள் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டனர். காங்கிரஸ் சிண்டிகேட் தலைவர்களும் இதனை வரவேற்றனர்.

மேலே நாம் குறிப்பிட்ட ஜனவரி 19-ஆம் நாள் காலை 526 காங்கிரஸ்எம்.பி.க்கள் கூடினர். மொரார்ஜி தேசாய்க்கு ஆதரவாக உ.பி. முதல்வராக இருந்த சுசேதா கிருபளானி, குஜராத் முதல்வர் ஆகிய இருவர் மட்டுமே தமது ஆதரவை வழங்கினர். இத்தேர்தலை ஜி.எஸ். பாதக் நடத்தினார். இரண்டு முறை வாக்குகளை எண்ணித் தேர்தல் முடிவை அறிவித்தார் ஜி.எஸ். பாதக்.

இந்திராகாந்தி - 355

மொரார்ஜி - 169.

இப்படிக் காமராசர் இந்திரகாந்தியைப் பிரதமர் ஆக்கினார். காமராசருக்குப் பிரதமர் ஆவதற்குக் கட்சியிலும், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் நல்ல பலம் இருந்தது. இருந்தாலும் அவர் இந்திரா காந்தியைப் பிரதமர் ஆக்குவதிலேயே குறியாக இருந்தார். தாம்பிரதமராகஆவதைக்காமராசரேவிரும்பவில்லை.

**பிரதமர் ஆவதற்குக் கிடைத்த இந்த வாய்ப்பை, 'வேண்டாம்' என்று மறுத்துவிட்டவர் - காமராசர்! இந்நிகழ்வில் தி.மு.க. எப்படிப் பங்கேற்று காமராசர் பிரதமர் ஆவதை தடுத்து நிறுத்தி இருக்க முடியும்? இது வேடிக்கையாக இல்லையா? ஆகவேதான் காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்தில் அவருக்குப் பிரதமர் ஆவதற்குரிய செல்வாக்கை நாம் எடுத்துக்காட்டி இருக்கின்றோம். மேலும் காங்கிரசுக்கு இருந்த 'கட்சி' செல்வாக்கை தி.மு.க. எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? அமித்ஷா தி.மு.க. மீது பழி சுமத்துவதோடு ஒரு மாபெரும் பொய்யை இட்டுக்கட்டி அல்லவா கூறுகிறார்? நாம் என்ன அவர் தங்கும் இடத்திற்கு தீவைத்தவர்களா, இல்லையே.**

காமராசரைத் தி.மு.க. 1954ஆம் ஆண்டு நடைபெற்ற குடியாத்தம் இடைத்தேர்தலில் அரசியல் காரணங்களுக்காக ஆதரித்து இருக்கிறது.

தி.மு.க. முதன் முதலில் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றிய போது மாநகராட்சியின் சார்பாக 1961-இல் அவருக்குச் சிலை எழுப்பிப் பெருமைப் படுத்தியது. லால்பகதூர் சாஸ்திரி மரணத்திற்குப் பிறகு காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுவினர்களும், மாநில முதல்வர்களும் காமராசர் பிரதமராவதை விரும்பினர். காமராசர்தான் மறுத்துவிட்டார். அவர் ஏற்றுக் கொண்டிருந்தால் தி.மு.க. அதனை வரவேற்று இருக்கும்.

நிகழ்வுகள் இப்படி இருக்கும்பொழுது அமித்ஷா ஏன் ஆகாசப் புளுகைச் சொல்கிறார். இதன்மூலம் அரசியலில் ஆதாயம் பெறலாம் என்று நினைக்கிறார். பா.ஜ.க.வின் புளுகு அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது.

(2) 1996 மார்ச் திங்களில் தமிழகத்தில் நடைபெறவிருந்த தேர்தலில் யாரோடு (இந்திரா) காங்கிரஸ் கூட்டணி அமைக்க வேண்டும் என்பதில் எழுந்த கருத்தில் நரசிம்மராவோடு முரண்பட்டார் மூப்பனார். நரசிம்மராவின் ஆலோசனைகளை மூப்பனார் ஏற்கவில்லை. இதனால் தமிழ்நாட்டில் மூப்பனார் அணி காங்கிரசில் தோன்றி அதுவே ஏப்ரல் 1996 வாக்கில் 'தமிழ்நாடு மாநில காங்கிரஸ் - மூப்பனார்' என்ற கட்சி உதயமாயிற்று.

இக்கட்சித் தமிழகத்தில் மே மாதம் நடந்த தேர்தலில் தி.மு.க.வோடு கூட்டணி அமைத்தது. மாநிலத்தில் ஆளுங்கட்சியான தி.மு.க.வுக்கு தோழமைக்கட்சியாகவும் மத்தியில் அமைச்சரவையிலும் அது பங்கேற்றது.

அப்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத்துக்கு மட்டுமல்ல, மக்களவைக்கும் தேர்தல் நடைபெற்றது. முக்கியக் கட்சியான தி.மு.க. தலைமை வகித்த முற்போக்குக் கூட்டணி 39 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. த.மா.கா. 20 இடங்களை வென்றது. தி.மு.க. 17 இடங்களில் வெற்றி பெற்றது. 1996-இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் எந்த அணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. வி.பி.சிங் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி கம்யூனிஸ்டு கட்சியினர், தி.மு.க., த.மா.கா. உட்பட அனைவரும் கேட்டுக் கொண்டனர். அவர் இசைவளிக்க மறுத்துவிட்டார்.

பா.ஜ.க. தனித்து 160 இடங்களைப் பெற்று இருந்ததால் வாஜ்பாய் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது. பெரும்பான்மை இல்லாத காரணத்தால் 13 நாள்களில் வாஜ்பாய் அரசு பதவி விலகியது. அப்போது தி.மு.க. மத்தியில் ஐக்கிய முன்னணியின் இடம் பெற்று இருந்தது. த.மா.கா.வும் அதில் இணைந்து இருந்தது. காங்கிரஸ் இந்த அணியை ஆதரித்ததால் தேவகவுடா பிரதமராகும் வாய்ப்புக்கிடைத்தது. அதுவும் 1997 மார்ச்சோடு காங்கிரஸ் ஆதரவைத் திரும்பப் பெற்றதால் தேவகவுடா பதவி விலகினார். பிறகு ஐ.கே.குஜ்ரால் பதவி யேற்றார். இதுவெல்லாம் எப்படி நடந்தது? இதோ, முத்தமிழ் அறிஞர் கலைஞர்'நெஞ்சுக்கு நீதியில்' எழுதுவதைப் படியுங்கள்.

"ஐக்கிய முன்னணி தலைமையில் எந்தவித மாற்றமும் செய்வதில்லை என்றும், பா.ஜ.க.வோ, காங்கிரஸ் கட்சியோ மத்தியிலே ஆட்சி அமைக்க ஐக்கிய முன்னணி ஆதரவு அளிப்பதில்லை என்றும் 12.4.97 அன்று காலையில் நடைபெற்ற வழிகாட்டுக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஐக்கிய முன்னணியின் வழி காட்டுக் குழுக் கூட்டம் அன்று மாலையிலும் நடைபெற்றது. இதற்கிடையே காங்கிரஸ் கட்சி ஐக்கிய முன்னணியின் தலைமையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று ஒரு நிபந்தனை தெரிவித்திருந்ததால், அதைப்பற்றி வழிகாட்டுக் குழுவிலே விவாதித்து, காங்கிரஸ் விதித்துள்ள நிபந்தனையின்படி ஐக்கிய முன்னணியின் தலைமையில் மாற்றம் செய்ய இயலாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எப்படியோ, விளைவை அறியாத குழந்தை விளக்கை எடுத்து வீட்டுக்குள்ளேயிருக்கும் திரைச் சீலையின் மீது பிடித்து விட்டதைப் போன்றதொரு நிகழ்ச்சி டெல்லிப் பட்டினத்தில் நடைபெற்றது. தீயைத் தடுக்கும் பணியிலும் வீட்டைக் காப்பாற்றும் பணியிலும் பொறுப்பை உணர்ந்து ஈடுபடுவதற்காக - ஒரு சில நாட்கள் டெல்லியிலேயே தங்கியிருந்தேன்.

இதற்கிடையிலே தமிழகத்தில் இருந்த சில ஏடுகள் எனக்கும் மூப்பனாருக்கும் மனத்தாங்கல் என்றும் - நான் பா.ஜ.க. பக்கம் போகப்போவதாகவும் தங்கள் தங்கள் கற்பனைக்கேற்றவாறு செய்திகளை வெளியிட்டன. அதிலே வேடிக்கை என்னவென்றால் நானும், மூப்பனார் அவர்களும் ஒன்றாகவே அமர்ந்து, விடிய விடிய விவாதித்துக் கொண்டிருக்கும் போதுதான் இப்படிப்பட்ட செய்திகள் வந்தன.

13.4.1997 அன்று இரவு ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக் கூட்டம் மீண்டும் தேவகவுடா இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசிய தேவகவுடா அவர்கள், பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணப்பட வேண்டுமென்ற அடிப்படையில், ஐக்கிய முன்னணித் தலைவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும், அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கத் தயாராக இருப்பதாகவும், பதவி விலகவும் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். 17.4.1997 அன்று மீண்டும் டெல்லியில் ஐக்கிய முன்னணியின் வழி காட்டுக்குழு கூட்டத்தைக் கூட்டுவதென்ற முடிவோடு சென்னை திரும்பினேன்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்தித்துக் கேட்ட முதல் கேள்வியே "மூப்பனார் பிரதமராக ஆவாரா?" என்பதுதான். "இப்போது எதுவும் சொல்ல இயலாது, 17ஆம் தேதி மறுபடியும் ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுதல் கூட்டம் கூடுகிறது. அதன் பிறகுதான் எதுவும் அறிவிக்கப்படும்" என்று கூறினேன். "ஐக்கிய முன்னணி ஆட்சி நீடிக்க வாய்ப்புகள் எப்படி இருக்கிறது?" என்று செய்தியாளர் கேட்டபோது, "ஐக்கிய முன்னணி ஆட்சி நீடிக்க எல்லாம் வல்ல ஜனநாயகம் அருள் புரியுமாக!" என்று சிரித்தவாறே கூறினேன்.

17ஆம் தேதி டெல்லியில் நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுதல் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் புறப்பட்ட நேரத்தில், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், "நீங்கள், தமிழர் நலனுக்காகத் தொடர்ந்து அதிகமாகப் பாடுபட்டுக் கொண்டு வருகிறீர்கள். ஒரு தமிழர் இப்போது முதன் முறையாக பிரதமராக வர வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் மூப்பனார் வரப்போகிறார் என்றும் வெளியே பேச்சு நடைபெறுகிறது. அதில் தங்களின் கருத்து என்ன?" என்று கேட்டபோது, **"பிரதமர் பதவிக்கு தமிழ்நாட்டிற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமேயானால், தி.மு.கழகம் மூப்பனாரின் பெயரைத் தவிர வேறு யார் பெயரைச் சொல்லும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?" என்று பதில் கூறினேன்.**

தொடர்ச்சி... நாளை




கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி 23 வது வட்டத்தில் 12 இடங்களில் கழக கொடி ஏற்றி ஆயிரம் பேருக்கு புடவைகள் மற்றும் காலை மதிய உணவுகள் என நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு தலைமையில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். நிகழ்ச்சியில் 23 அ வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன், வட்ட கழக நிர்வாகிகள் து.எழில் குமார், மு.விக்னேஸ்வ ரன், மேக்ஸிலா, உதயகுமார், சொ.சரவணன், வே..ரவி, நெல்சன்ராஜ், க.ந.க. சைமன், முத்துவேல், உள்ளிட்ட திரளான கழகத்தினர் கலந்து கொண்டார்கள்.

## அரியலூர் மாவட்ட முரசொலி நிருபர்

# மு.குமார் மனைவி பூங்கொடி குமார் மறைவு!

## கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி!



*அரியலூர். ஜூன் 22- அரியலூர் மாவட்ட முரசொலி நிருபரும், ஜெயங்கொண்டம் நகராட்சி துணைச் செயலாளருமான மு.குமார் மனைவி மு.பூங்கொடி (வயது 42) திடீர் உடல் நலக்குறைவால் நேற்று 21.06.2023 அன்று காலை 5.00 மணியளவில்மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அன்னாரின்மறைவுச் செய்தி அறிந்த கழக நிர்வாகிகள், ஊடகத் துறையினர் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.*

*அம்மையாரது இறுதி ஊர்வலம் இன்று (22.06.2023) காலை 10.00 மணியளவில் ஜெயங்கொண்டம், அண்ணா நகரில் இருந்து புறப்படும்.*


தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
கள்ளக்குறிச்சி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு
முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 2022-23ம் ஆண்டிற்கு ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல்
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி இணை இயக்குநர்/ திட்ட இயக்குநரால் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2022—23ம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 21 ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 21.06.2023 முதல் 05.07.2023 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கியமான நாள் மற்றும் நேரம்.
(i) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 05.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை.
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 05.07.2023, 4.00 மணிக்கு.
செ.ம.தொ.இ./ 3203 /ஒப்பந்தப்புள்ளி/2023
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



கோயம்புத்தூர் மாநகராட்சி
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 39 / 2023 நாள்: 21.06.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம் - 24க்குட்பட்ட பகுதியில் மழைநீர் வடிகால், தார் சாலை, மைய தடுப்பு மற்றும் நடைபாதை அமைத்தல் பணிகள் | 4 பணிகள் | 06.07.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 07.07.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன் ஹால், கோயம்புத்தூர்-1. தொலைபேசி எண்.0422 2396026 Email: commr.coimbatore@tn.gov.in
வெ.ஆ.எண். 301/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 21.06.2023
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



கோயம்புத்தூர் மாநகராட்சி
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 5 / 2023 நாள்: 19.06.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் - 63,64,65,66, 67,68,69,70,80,81,82,83 மற்றும் 84-க்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால், சாலை பணிகள், மோட்டார் பொருத்துதல் பணி, மராமத்து பணிகள், பராமரிப்பு பணிகள், பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் | 26 பணிகள் | 04.07.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 05.07.2023 பிற்பகல் 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன் ஹால், கோயம்புத்தூர்-1. தொலைபேசி எண்.0422 2396026 Email: commr.coimbatore@tn.gov.in
வெ.ஆ.எண். 304/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 21.06.2023
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
கள்ளக்குறிச்சி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு
முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 2022-23ம் ஆண்டிற்கு ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல்
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி இணை இயக்குநர்/ திட்ட இயக்குநரால் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2022—23ம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 3 ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 21.06.2023 முதல் 20.07.2023 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கியமான நாள் மற்றும் நேரம்.
(i) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 20.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை.
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 20.07.2023, 4.00 மணிக்கு.
செ.ம.தொ.இ./ 3204 /ஒப்பந்தப்புள்ளி/2023
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
தாம்பரம் மாநகராட்சி
ந.க.எண்.44/2022/இ1 (மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு) நாள்: 20.06.2023
தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களால் 15th CFC (Untied Grant) 2022-23 நிதியின் கீழ் ... https://tntenders.gov.in ... E-Tendering ... E-Submission ... (Two Cover System) ...

| வ.எண். | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | வைப்புத் தொகை 1% (ரூ) | செலவுக் கட்டணம் (ரூ) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் ஜிஎஸ்டி பிரதான சாலை, MIT மேம்பாலம், PONDS மேம்பாலம் ஆகிய பகுதியில் ... மின் விளக்குகள் பொருத்தும் பணி | 100.00 | 12.07.2023 | 100000 | 5000 | 3 மாதங்கள் |

ஒப்பந்தப்புள்ளி ... 28.06.2023 ... 11.00 மணி ... தாம்பரம் மாநகராட்சி ... https://tntenders.gov.in ... 22.06.2023 ... 10.00 மணி ...
செ.ம.தொ.இ./316/ஒப்பந்தப்புள்ளி/2023
ஆணையாளர், தாம்பரம் மாநகராட்சி
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"